திரு. உமாநாத் * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் பேசக் கூடாது என்று சொல்லியதிலிருந்து திரு. உமாநாத் தொடர்ந்து பேசியது அத்தனையையும் நீக்க உத்தரவிடுகிறேன். அடுத்து, அரசினர், சட்ட முன்வடிவுகள்.

(கூச்சல், குழப்பம்)

(7) அரசினர் சட்ட முன்வடிவு.

தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு. 1979

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.''

(கூச்சல் — குழப்பம்)

(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) சிம்கோ மீட்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விதி 86—ஐ மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சபையின் இதர அலுவல்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு உறுப்பினர்கள் ஒன்று உதவியாக இருக்கவேண்டும். அல்லது அவர்கள் வெளிநடப்பு செய்யலாம். அப்படியின்றி அவை நடவடிக்கைகளை தடை செய்து கொண்டிருப்பதன் காரணமாக அவர்களை அவையிலிருந்து அகற்றுவதற்காக ஒரு சூழ்நிலைக்கு என்னை ஆளாக்காமல் அவர்கள் ஒன்று வெளியேறலாம் அல்லது அமைதியாக அமர வேண்டும்.

(கூச்சல், குழப்பம்)

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.